# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2014

10 - ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

காலம் : 2.30 மணி — பிரிவு - I (பகுதி - I) (மதிப்பெண்கள் : 24) — மதிப்பெண்கள் : 100

I 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் இங்கிலாந்து சீனாவிற்காக ஏற்படுத்திய கொள்கை ........ 14 X 1 = 14
   அ) திறந்த வெளிக் கொள்கை ஆ) வாரிசு இழப்புக் கொள்கை
   இ) பாதுகாக்கப்பட்ட வியாபாரக் கொள்கை ஈ) நிலம் அழித்தல் கொள்கை
2. 1941 ஆம் ஆண்டு ஹிட்லர் படையெடுத்த நாடு ............ .
   அ) ரஷ்யா ஆ) பிரான்சு இ) பிரஷ்யா ஈ) பாரசீகம்
3. பன்னாட்டு நீதிமன்றத்தின் தலைமையகம் அமைந்துள்ளது
   அ) திஹேக் ஆ) பெர்லின் இ) ரோம் ஈ) டோக்கியோ.
4. சென்னை மகா ஜன சபையின் முதல் தலைவர் ............... .
   அ) பாரதியார் ஆ) காமராஜர் இ) பி. இரங்கையா நாயுடு ஈ) இராஜாஜி
5. மத்தியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பு .............. .
   அ) சட்டமன்றம் ஆ) உச்ச நீதி மன்றம் இ) பொதுக் கட்சிகள் அவை ஈ) பாராளுமன்றம்
6. தேம்பாவணியோடு தொடர்புடையது .............. .
   அ) இந்துமதம் ஆ) சீக்கிய மதம் இ) கிறித்துவ சமயம் ஈ) இஸ்லாம்
7. உலக நுகர்வோர் உரிமைகள் தினமாக கொண்டாடப்படுவது ............... .
   அ) மார்ச் 15 ஆ) மார்ச் 16 இ) மார்ச் 14 ஈ) மார்ச் 11
8. பாக் நீர் சந்தி ......... வை இந்தியாவிலிருந்து பிரிக்கிறது.
   அ) ஸ்ரீலங்கா ஆ) மியான்மார் இ) மாலத்தீவுகள் ஈ) இலட்சத்தீவுகள்
9. சோடா நாகபுரி பீடபூமி .......... வளத்திற்கு புகழ்பெற்றது.
   அ) இயற்கைத் தாவரம் ஆ) கனிமவளம் இ) வண்டல் மண் ஈ) பருத்தி
10. மோனோசைட் மணலில் காணப்படும் தாது .............. .
    அ) எண்ணெய் ஆ) யுரேனியம் இ) தோரியம் ஈ) நிலக்கரி
11. மின்காந்தம் பிரதிபலிப்பதை கண்டறியும் கருவி .............. .
    அ) இலக்கு ஆ) உணரி இ) பொருள் ஈ) புகைப்பட கருவி
12. முதன்மைத் துறை என்பது ............. .
    அ) வணிகம் ஆ) கட்டமைப்புத் துறை இ) வேளாண்மைத் துறை ஈ) தொலைத் தொடர்புத்துறை
13. பசுமை புரட்சி நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு ............. .
    அ) 1967 ஆ) 1977 இ) 1987 ஈ) 1957
14. இந்தியத் திட்டக்குழுவின் தலைவர் ............... .
    அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதமர் இ) நிதியமைச்சர் ஈ) குடியரசுத் துணைத்தலைவர்

### பகுதி - II

15. குறிப்பு : இரு வினாக்களுக்கும் பொருத்துக. 2 X 5 = 10

i)

| | | | |
|---|---|---|---|
| அ) | டியூஸ் | - | பான்கி மூன் |
| ஆ) | வள்ளலார் | - | கான் அப்துல் காபர்கான் |
| இ) | கேசரி | - | முசோலினி |
| ஈ) | எல்லை காந்தி | - | இராமலிங்க அடிகள் |
| உ) | வைக்கம் வீரர் | - | பால கங்காதர திலகர் |
| | | - | ஈ. வெ. ராமசாமி |
| | | - | ராஜா ராம் மோகன்ராய் |

ii)

| | | | |
|---|---|---|---|
| ஊ) | கேரளாவின் மிகப்பெரிய ஏரி | - | அஸ்ஸாம் |
| எ) | மாங்குரோவ் காடுகள் | - | ஒரு வித நிலக்கரி |
| ஏ) | லிக்னைட் | - | வேம்ப நாடு |
| ஐ) | தெற்கு இரயில்வே | - | பிரெஞ்சு மேப்பியலாளர்கள் |
| ஒ) | காற்றில் மிதக்கும் பலூன் | - | சென்னை |
| | | - | சுந்தரவனம் |
| | | - | மும்பை |

### பிரிவு - II (மதிப்பெண்கள் : 20) பகுதி - I

II குறிப்பு : i) ஏதேனும் பத்து வினாக்களுக்கு சிறுவிடை தருக. ii) பகுதி - I ல் நான்கு வினாக்கள் பகுதி - II -ல் ஒரு வினா. பகுதி - III -ல் நான்கு வினாக்கள் & பகுதி - IV -ல் ஒரு வினாவும் தேர்வு செய்க. 10 X 2 = 20

16. இராணுவ ஏகாதிபத்தியம் பற்றி எழுதுக.
17. சர்வதேச சங்கத்தின் அங்கங்கள் யாவை?
18. தேசிய தொழில் மீட்புச் சட்டம் - குறிப்பு வரைக.
19. அழித்துப் பின்வாங்கும் கொள்கை பற்றி குறிப்பு வரைக.
20. மிதவாதிகளில் முக்கியமான சிலரின் பெயர்களைக் குறிப்பிடுக.
21. சுதந்திர போராட்டத்தில் வாஞ்சிநாதனின் பங்கு பற்றி எழுதுக.
22. சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்கள் யாவை?
23. லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் முஸ்லீம் லீகின் முக்கியத்துவம் என்ன?

### பகுதி - II

24. அரசியல் கட்சிகள் என்றால் என்ன?
25. கோப்ரா தோற்றம் பற்றி சிறுகுறிப்பு வரைக.

### பகுதி - III

26. இந்தியாவின் முக்கிய இயற்கை அமைப்பு பிரிவுகள் யாவை?
27. இந்திய காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகளின் பெயர்களைக் கூறுக.

28. திணைவகைப் பயிர்கள் எங்கு ஏன் பயிரிடப்படுகின்றன?
29. சணல் பொருட்கள் யாவை?
30. உயிரினப்பன்மை என்றால் என்ன?
31. செழுமையான மண்ணில் காணப்படும் பொருட்கள் யாவை?
32. குழாய் போக்குவரத்தின் நன்மைகள் யாவை?
33. தொலை நுண்ணுணர்வின் பகுதிகள் யாவை?

பகுதி - IV

34. தலையிடாக் கொள்கை - சிறுகுறிப்பு வரைக.
35. கலப்பு பொருளாதாரம் என்றால் என்ன?

பிரிவு - III (மதிப்பெண்கள் : 8)

குறிப்பு : ஏதேனும் நான்கினை வேறுபடுத்தி காட்டுக. 4 X 2 = 8

36. கிரீன்விச் தீர்க்க நேரம் - இந்திய திட்ட நேரம்.
37. தென்மேற்கு பருவகாற்று மற்றும் வடகிழக்கு பருவகாற்று.
38. காற்று சக்தி மற்றும் அனல் மின் சக்தி.
39. ராபி மற்றும் கையத் பயிர்கள்.
40. வேளாண் சார்ந்த தொழிலகம் - கனிமம் சார்ந்த தொழிலகம்.
41. உள்நாட்டு வணிகம் - பன்னாட்டு வணிகம்.
42. சாலை வழி - இரயில் வழி.
43. வான்வெளிப்படங்கள் மற்றும் செயற்கைகோள் படங்கள்.

பிரிவு - IV (மதிப்பெண்கள் : 8)

III கீழ்கண்ட தலைப்புகளில் இரண்டினைத் தேர்ந்தெடுத்து அவற்றின் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

44. பிளாசி மற்றும் பக்சார் போர் 2 X 4 = 8
அ) 1757ம் ஆண்டு வங்காளத்தின் நவாப்பாக இருந்தவர் யார்?
ஆ) துணைப்படைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியவர் யார்? இ) டல்ஹௌசி பிரபுவின் கொள்கை யாது?
ஈ) விக்டோரியா மகாராணியின் பிரகடனம் எப்பொழுது வெளியிடப்பட்டது?

45. அடால்ஃப் ஹிட்லர்
அ) அடால்ஃப் ஹிட்லர் எங்கு பிறந்தார்? ஆ) அவர் தந்தையின் தொழில் என்ன?
இ) ஹிட்லர் எதனைத் தோற்றுவித்தார்? ஈ) ஹிட்லர் எழுதிய புத்தகத்தின் பெயர் என்ன?

46. பிரம்மஞான சபை
அ) பிரம்மஞான சபையை நிறுவியவர் யார்? ஆ) பிரம்மஞான சபை நிறுவப்பட்டது ஏன்?
இ) 1893 ஆம் ஆண்டு பிரம்ம ஞான சபையின் தலைவர் யார்?
ஈ) பிரம்ம ஞான சபையின் தலைமையகம் எங்குள்ளது?

47. கே. காமராஜர்
அ) காமராஜர் எப்படி அரசியலில் நுழைந்தார்? ஆ) 1930 - ல் எங்கு சிறையில் அடைக்கப்பட்டார்?
இ) 1947 - ம் ஆண்டு இந்திய தேசியக் கொடியை எங்கு ஏற்றினார்?
ஈ) காமராஜர் எப்பொழுது இறந்தார்?

பிரிவு - V (மதிப்பெண்கள் : 20) பகுதி - 1

IV குறிப்பு : ஒவ்வொரு வினா எண்ணிலும் உள்ள மூன்று வினாக்களில் ஒன்றினைத் தேர்வு செய்து நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4 X 5 = 20

48. அ) ஐ.நா. வின் முக்கியமான சாதனைகள் யாவை? (அல்லது)
ஆ) 1920 - 22 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தின் படிநிலைகளை விளக்குக. ஒத்துழையாமை இயக்கம் கைவிடப்பட்டது ஏன்? (அல்லது) இ) பாரதியார் ஒரு சுதந்திர போராட்ட வீரர் - நிரூபி.

பகுதி - 2

49. அ) ஜனநாயகத்தில் எதிர்கட்சியின் பங்கினை விளக்குக. (அல்லது)
ஆ) தேசிய ஒருமைப்பாடு பற்றி ஒருபத்தியில் எழுதுக. (அல்லது)
இ) நுகர்வோர் உரிமைகள் பற்றி எழுதுக.

பகுதி - 3

50. அ) இமயமலையின் முக்கியத்துவத்தை விவரிக்க. (அல்லது)
ஆ) இந்திய வேளாண் தொழிலில் உள்ள பிரச்சினைகள் யாவை? (அல்லது)
இ) அமில மழை பற்றி குறிப்பு வரைக.

பகுதி - 4

51. அ) பதினோறாவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கங்களை விவரி. (அல்லது)
ஆ) நலம் நாடும் அரசுகளின் பணிகளை விவரி. (அல்லது)
இ) நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகளை விவரி.

பிரிவு - VI (மதிப்பெண்கள் : 5)

குறிப்பு : கீழ்கண்டவற்றுக்கு காலக்கோடு வரைக. 5

52. 1900 முதல் 1920 வரையிலான எவையேனும் ஐந்து வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுது.

பிரிவு - VII (மதிப்பெண்கள் : 15)

53. அ) ஆசிய வரைபடத்தில் கீழ்கண்டவற்றினை குறிக்கவும். 5
i) பீகிங் ii) பார்மோசா iii) கொரியா iv) சாகலின் தீவுகள் v) மலேசியா (அல்லது)
ஆ) இந்திய வரைபடத்தில் கீழ்கண்டவற்றினை குறிக்கவும்.
i) ஹைதராபாத் ii) மீரட் iii) டெல்லி iv) பம்பாய் v) ஜான்சி

54. கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் ஏதேனும் பத்து இடங்கள் / பகுதிகள் குறிக்கவும். 10
i) கங்கைச் சமவெளி ii) இமயமலை iii) காவிரி ஆறு iv) மேற்கு தொடர்ச்சி மலை
v) தக்காண பீடபூமி vi) ரான் ஆப் கட்ச் vii) சோழமண்டலக் கடற்கரை viii) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை ix) மன்னார் வளைகுடா x) எவரெஸ்ட் xi) அந்தமான் நிகோபார் தீவுகள் xii) 50 செ.மீக்கு குறைவாக மழைபெறும் பகுதி xiii) கோதுமை விளையுமிடம் ஒன்று xiv) சுந்தரவனம் xv) தூத்துக்குடி